# மார்ச் - 21 - செவ்வாய்

**நிக்கோலாஸ் தி புளுயி**

**ஆண்டவரே, உம் பாதைகளை நான் அறியச் செய்தருளும்: திபா. 25:4**

---

## முதல் வாசகம் : தானியேல் (இ) 1: 2, 11 – 19

அப்பொழுது அசரியா நெருப்பின் நடுவில் எழுந்து நின்று, உரத்த குரலில் பின்வருமாறு மன்றாடினார் "உமது பெயரை முன்னிட்டு எங்களை என்றும் கைவிட்டுவிடாதீர் உமது உடன்படிக்கையை முறித்துவிடாதீர். உம் அன்பர் ஆபிரகாமை முன்னிட்டும், உம் ஊழியர் ஈசாக்கை முன்னிட்டும் உம் தூயவர் இஸ்ரயேலை முன்னிட்டும், உம் இரக்கம் எங்களைவிட்டு நீங்கச் செய்யாதீர். விண்மீன்களைப் போலவும் கடற்கரை மணலைப் போலவும் அவர்களின் வழிமரபினரைப் பெருகச் செய்வதாக நீர் அவர்களுக்கு உறுதி அளித்தீர். ஆண்டவரே, எங்கள் பாவங்களால் மற்ற மக்களினங்களைவிட நாங்கள் எண்ணிக்கையில் குறைந்து விட்டோம் உலகெங்கும் இன்று தாழ்வடைந்தோம். இப்பொழுது எங்களுக்கு மன்னர் இல்லை, இறைவாக்கினர் இல்லை, தலைவர் இல்லை எரிபலி இல்லை, எந்தப் பலியும் இல்லை காணிக்கைப்பொருளோ தூபமோ இல்லை. உம் திருமுன் பலியிட்டு, உம் இரக்கத்தைப் பெற இடமே இல்லை. ஆயினும், செம்மறிக்கடாக்கள், காளைகளால் அமைந்த எரிபலி போலும் பல்லாயிரம் கொழுத்த ஆட்டுக்குட்டிகளாலான பலிபோலும் நொறுங்கிய உள்ளமும் தாழ்வுற்ற மனமும் கொண்ட நாங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவோமாக. அவ்வாறே எமது பலி இன்று உம் திருமுன் அமைவதாக. நாங்கள் முழுமையாக உம்மைப் பின்பற்றுவோமாக் ஏனெனில் உம்மில் நம்பிக்கை வைப்போர் வெட்கத்திற்கு ஆட்படமாட்டார். இப்பொழுது நாங்கள் முழு உள்ளத்துடன் உம்மைப் பின்பற்றுகிறோம் உமக்கு அஞ்சி, உம் முகத்தை நாடுகிறோம். எம்மை வெட்கத்துக்கு உள்ளாக்காதீர். மாறாக, உம் பரிவிற்கு ஏற்பவும், இரக்கப் பெருக்கிற்கு ஏற்பவும் எங்களை நடத்தும்.

**பதில்பாடல்:** ஆண்டவரே உமது இரக்கத்தையும் உமது பேரன்பையும் நினைத்தருளும்.

## நற்செய்தி: மத்தேயு 18: 21 – 35

பின்பு பேதுரு இயேசுவை அணுகி, "ஆண்டவரே, என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் எனக்கு எதிராகப் பாவம் செய்துவந்தால் நான் எத்தனை முறை அவரை மன்னிக்க வேண்டும்? ஏழு முறை மட்டுமா? எனக் கேட்டார். அதற்கு இயேசு அவரிடம் கூறியது: "ஏழுமுறை மட்டுமல்ல எழுபது தடவை ஏழுமுறை என நான் உனக்குச் சொல்கிறேன். விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம் ஓர் அரசர் தம் பணியாளர் களிடம் கணக்குக் கேட்க விரும்பினார். அவர் கணக்குப் பார்க்கத் தொடங்கியபொழுது, அவரிடம் பத்தாயிரம் தாலந்து கடன்பட்ட ஒருவனைக் கொண்டு வந்தனர். அவன் பணத்தைத் திருப்பிக் கொடுக்க இயலாத நிலையில் இருந்தான். தலைவரோ, அவனையும் அவன் மனைவி மக்களோடு அவனுக்குரிய உடைமைகள் யாவற்றையும் விற்றுப் பணத்தைத் திருப்பி அடைக்க ஆணையிட்டார். உடனே அப்பணியாள் அவர் காலில் விழுந்து பணிந்து, "என்னைப் பொறுத்தருள்க எல்லாவற்றையும் உமக்குத் திருப்பித் தந்து விடுகிறேன்" என்றான். அப்பணியாளின் தலைவர் பரிவு கொண்டு அவனை விடுவித்து அவனது கடன் முழுவதையும் தள்ளுபடி செய்தார். ஆனால் அப்பணியாள் வெளியே சென்றதும், தன்னிடம் நூறு தெனாரியம் கடன்பட்டிருந்த உடன் பணியாளர் ஒருவரைக் கண்டு, "நீ பட்ட கடனைத் திருப்பித் தா" எனக்கூறி அவரைப் பிடித்துக் கழுத்தை நெரித்தான். உடனே அவனுடைய உடன் பணியாளர் காலில் விழுந்து, என்னைப் பொறுத்தருள்க் நான் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்" என்று அவனைக் கெஞ்சிக் கேட்டார். ஆனால் அவன் அதற்கு இசையாது, கடனைத் திருப்பி அடைக்கும்வரை அவரைச் சிறையிலடைத்தான். அவருடைய உடன் பணியாளர்கள் நடந்ததைக் கண்டபோது மிகவும் வருந்தித் தலைவரிடம் போய் நடந்தவற்றையெல்லாம் விளக்கிக் கூறினார்கள். அப்போது தலைவர் அவனை வரவழைத்து, "பொல்லாதவனே, நீ என்னை வேண்டிக் கொண்டதால் அந்தக் கடன் முழுவதையும் உனக்குத் தள்ளுபடி செய்தேன். நான் உனக்கு இரக்கம் காட்டியதுபோல நீயும் உன் உடன் பணியாளருக்கு இரக்கம் காட்டியிருக்க வேண்டும் அல்லவா? என்று கேட்டார். அத்தலைவர் சினங் கொண்டவராய், அனைத்துக் கடனையும் அவன் அடைக்கும்வரை அவனை வதைப்போரிடம் ஒப்படைத்தார். உங்களுள் ஒவ்வொருவரும் தம் சகோதரர் சகோதரிகளை மனமார மன்னிக்கா விட்டால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தையும் உங்களை மன்னிக்க மாட்டார்.

**தியானம்:** "மன்னிக்க மறுத்த பணியாளன் உவமை" என்னும் தலைப்பில் வருகின்ற கதைவழியாக இயேசு நமக்கு மன்னிப்பின் மேன்மையை கற்பிக்கின்றார். இக்கதையில் வருகின்ற அரசர் தமக்கு மிகப்பெரிய கடன் பட்டிருந்த ஒருவருக்கு அக்கடனை மன்னிக்கின்றார். ஆனால் மன்னிப்பு பெற்ற மனிதரோ தன் உடன் பணியாளர் தமக்கு செலுத்த வேண்டிய ஒரு சிறு தொகையை மன்னிக்க மறுத்து விடுகின்றார். கடவுள் நம் குற்றங்களையும், பாவங்களையும் தாராள மனத்தோடு மன்னிக்கின்றார். ஆனால் நாமோ நம் சகோதர சகோதரிகளின் சிறுபிழைகளையும் மன்னிக்க தயக்கம் காட்டுகின்றோம். இதற்கு அடிப்படைக் காரணம் நாம் மன்னிப்பின் உண்மையான பொருளை உணராமல் இருப்பதேயாகும் மன்னிப்பு என்பது அன்பின் வெளிப்பாடு. கடவுள் வழங்குகின்ற மன்னிப்பை நாம் பிறரோடு பகிர்ந்திட அழைக்கப்படுகின்றோம் கடவுளுக்கு எதிராக நாம் செய்கின்ற குற்றங்கள் எவ்வளவு தான் பெரிதாக இருந்தாலும் அவற்றையெல்லாம் மன்னிக்க கடவுள் எப்போதும் தயாராயிருக்கின்றார். ஆனால் நமக்கு எதிராக யாராவது குற்றம் செய்தால் நாம் மன்னிக்க மறுக்கின்றோம். உண்மையிலேயே மன்னிப்பு என்னும் கொடையை நாம் கடவுளிடமிருந்து நன்றியோடு ஏற்றுக் கொண்டால் அக்கொடையை பிறரோடு பகிர்ந்து கொள்வது நமக்கு மகிழ்ச்சி தரும் ஒரு நிகழ்வாக அமையும். எனவே மன்னிப்பை பெற்ற நாம் மன்னிப்பை மகிழ்வுடன் வழங்கிட முன்வருவோம் ஆமென்.